# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை

## அசல் வழக்கு எண். 60 /2019

PW1 – திரு. மாரிமுத்து நாள். 26.04.2024

(1969ம் ஆண்டில் 44வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திரு.S.துரைமுருகன் என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. எனது தகப்பனார் சொத்துக்களை பொறுத்த வரையில் 2000ம் ஆவது ஆண்டு பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் மதுரையில் எந்த வருடத்தில் இருந்து வேலை செய்து வந்தேன் என்றால் 1994 முதல் 2007 வரை ஆகும். நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.Sc., Chemistry படித்துள்ளேன். நான் எந்த வருடம் என் பட்டபடிப்பை முடித்தேன் என்றால் 1993 ம் வருடம் முடித்தேன். எனது சகோதரர்கள் படிக்காதவர்கள் என்றால் 7 ம் வகுப்பு வரை படித்துள்ளார்கள். எனது தகப்பனாரின் சொத்துக்களின் வரவு செலவு கணக்குகளை நான் தான் பார்த்து வந்தேன் என்றால் சரியல்ல எனது தாய், தந்தை தான் பார்த்து வந்தார்கள். எனது சகோதரர் மாணிக்கம் சென்னையில் குடியிருந்து வந்ததாலும், எனது மற்றொரு சகோதரர் திருமலை வெளிநாட்டில் இருந்ததாலும் வரவு செலவு கணக்குகளை நான் தான் பார்த்து வந்தேன் என்றும் பார்க்கவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு எந்த வயதில் திருமணம் நடைபெற்றது என்றால் 31 வயதில். நான் எனது பிராதில் சொல்லியுள்ள வயது

விவரங்கள் சரிதானா என்றால் சரிதான்.

2. நான் மதுரையில் வேலைக்கு சேரும் போது எனது வயது என்னவென்றால் சுமார் 22 வயது இருக்கும். என்னிடம் காட்டப்படும் இவ்வழக்கில் தாக்கல் செய்த வக்காலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் என்றால் சரிதான். பிரதிவாதிகள் என் மீது காவல் நிலையத்தில் எதற்காக புகார் கொடுத்தார்கள் என்றால் தாவா சொத்தில் பங்கு உள்ளதாக கொடுத்தார்கள். பிரதிவாதிகளுக்கு தாவா சொத்து தொடர்பாக பதிவு செய்யப்படாத கிரையப் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளேன் என்றும் அதை மறுத்ததால் பிரதிவாதிகள் என் மீது புகார் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி புகார் நகலை பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை.

3. நான் தாவா சொத்து தொடர்பாக பிரதிவாதிகள் மீது புகார் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை படித்து பார்த்து தான் கையொப்பம் இட்டேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் புகார் கொடுப்பதற்கு முன்னர் தாவா சொத்து தொடர்பாக கிராம முக்கியஸ்தர்கள் முன்னிலையில் பஞ்சாயத்து நடந்ததா இல்லை என்றால் நடக்கவில்லை. மேற்படி பஞ்சாயத்து நடைபெற்றது என்றும் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தானது எனது சகோதரர்களின் வருமானத்தின் அடிப்படையிலும், பூர்விக சொத்திலிருந்து வந்த வருமானத்தின் அடிப்படையிலும் குடும்பத்தை நான் பராமரித்து வந்தேன் என்பதால் கற்த்தா என்ற அடிப்படையில் எனது பெயரில் கிரையம் பெறப்பட்டது என்றால் சரியல்ல.

4. நான் 1994ம் ஆண்டு வேலை பார்க்க தொடங்கி விட்டேன் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல வேலை பார்த்ததற்கான சான்றிதழ் உள்ளது. நான் கிரையம் வாங்கியதாக சொல்லப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலமாக தாவா சொத்தில் எனக்கு எவ்வித தனித்த பாத்தியம் இல்லை என்றால்

சரியல்ல. டிசம்பர் மாதம் 1999 ம் வருடம் நானும், எனது சகோதரர்களும் தாவா சொத்தை வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்றால் சரியல்ல. மேற்படி பாகப்பிரிவினையின் அடிப்படையில் தென்பகுதியில் எனக்கும், திருமலைக்கும் தலா 3.5 செண்ட் பாகமும் வடபகுதியில் 1ம் பிரதிவாதியின் கணவர் மாணிக்கத்திற்கு 4 செண்ட் பாகமும் பிரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி பாகப்பிரிவினையின் அடிப்படையில் தான் நானும் எனது சகோதரர்களும் தனித்தனியாக வீடு கட்டி அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. எனது சகோதரர் மாணிக்கம் இறந்து விட்டதால் அவரது பாக சொத்தை அபகரிக்கும் நோக்கில் உரிமை கோரியதால் அது தொடர்பாக பஞ்சாயத்து நடைபெற்றது என்றால் சரியல்ல. மேற்படி பஞ்சாயத்து நடைபெற்றது என்றும் அதில் கட்டுப்பட்டுதான் 15.07.2019 அன்று பதிவு செய்யப்படாத கிரையப் பத்திரம் எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. புகாரின் அடிப்படையில் காவல் துறையினர் எங்களை விசாரித்தார்களா என்றால் துணைக் கண்காணிப்பாளர் என்னை தொலைபேசியில் விசாரித்தார். பிரதிவாதிகளை அவர்கள் கொடுத்த புகாரின் பேரில் மேல்நடவடிக்கை எடுக்க விடாமல் எனது செல்வாக்கை பயன்படுத்தி தடுத்து விட்டேன் என்றால் சரியல்ல. தாவா மொத்த சொத்தில் தென்புறம் 4 செண்ட் பிரதிவாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்து என்றும் அவர்கள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. மொத்த சொத்தில் 4 செண்ட் பாத்தியம் என பிரதிவாதிகள் எதிர்வாதம் செய்கிறார்கள் என்றால் 7 செண்ட் என செய்கிறார்கள். நான் பிராதில் கோரிய பரிகாரம் எதுவும் எனக்கு கிடைக்கக்கூடியது இல்லை என்றும் வழக்கு சொத்தில் எனக்கு எந்த வித தனித்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

(ஓம்/திரு.தெ.மனிஷ்குமார்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை